Registered as a News Paper in Sri Lanka    விலை ரூபா! 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 02    திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 24    ( 07 - 05 - 1991 )    செவ்வாய்க்கிழமை    ஓசை: 78

## பிரான்ஸ் மருத்துவக் குழு மடுவிலிருந்து விலகலாம்?

(கொழும்பு)

பிரான்ஸ் நாட்டின் மருத்துவ உதவி அமைப்பு உறுப்பினர் சிலர் சிறிலங்கா விமானப் படையினர் நடாத்திய விமானத் தாக்குதலில் காயமடைந்ததையடுத்து, அந்த அமைப்பினர் மடுக்கோயில் பகுதியிலிருந்து விலகிக் கொள்ளக்கூடும் என்று இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது. 20,000 க்குமேற்பட்ட பேர் தங்கியிருக்கும் மடுக்கோயில் முகாம்களைப்பரா (4ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் தமிழின அழிப்பு; உலகம் கரிசனையாக இல்லை

## அவுஸ்திரேலியப் பாதுகாப்புக் குழுத் தலைவர் ரெட்கிறேஸ்

( கான்பரா )

இலங்கையில் இடம்பெறும் இன அழிப்புத் தொடர்பாக உலக சமூகம் எவ்வித கரிசனையும் எடுக்கவில்லை. வளைகுடாச் சிக்கலில் அந்த நாட்டில் தமிழ் இனம் அழிக்கப்படுவதை சகலரும் மறந்து விட்டார்கள். தொடர்ந்தும் சிறுபான்மையினரான தமிழரின் கோரிக்கைகளுக்கு உலகம் செவிசாய்க்காமல் இருக்கிறது என்று வெளிவிவகாரம், மற்றும் வர்த்தகம் பாதுகாப்புக் குழுவின் தலைவர் ரெட்கிறேஸ் அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

பிழை சரிகள் இரண்டு பக்கங்களிலும் இருக்கலாம். துன்பகரமான அந்த நாட்டில் போர் ஓய்வைக் கொணர்ந்து சமாதானத் தீர்வை ஏற்படுத்துவதற்கு ஐரோப்பிய அரசுகள் முக்கிய பங்களிக்க வேண்டும். பால்டிக் நாடுகள், யுக்கோசெலவேக்கியா, சிறிலங்கா ஆகிய நாடுகளில் சிறுபான்மை இனங்கள் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்றன. குவைத் பிரச்சினைக்கும் இந்த நாடுகளுக்கும் வித்தியாசம் உண்டு. குவைத்தில் ஏலவே இருந்த ஒரு ஆட்சி ஆக்கிரமிக்கப்பட்டது. வளைகுடாப் போருக்கு முக்கியத்துவம் தந்த செய்தி இதழ்கள் போராடும் சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளை இருட்டடிப்புச் செய்து விட்டன.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 10 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாடசாலைகள் யாவும் முன்னர் அறிவிக்கப்பட்டவாறு இரண்டாம் தவணைக்காக எதிர் வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் என யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் ஆ சுந்தர (4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இளைஞர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரை விலுச் சந்தியில் கடந்த சனிக்கிழமையன்று குழந்தைவேல (வயது 9, வாகரை) என்ற தமிழ்ப் பொதுமகனை சிறிலங்கா இராணுவத்தினர் கைதுசெய்து முகாமிற்குக்கொண்டு சென்றுள்ளனர்.

## செயற்கைக் கால்கள் கொண்டுவரத் தடை

(யாழ்ப்பாணம்)

செயற்கைக் கால்கள் செய்வதற்குக் கடந்த ஒரு வருடமாகத் தென் பகுதியிலிருந்து மூலப் பொருள்கள் அனுப்பப்படாத நிலையிலும் யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிலையத்தில் நூற்றுக்குமதிகமான செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டுள்ளன. இத்தகைய உள்ளூர் செயற்கைக் கால்களைத் தயாரிப்பதற்குப் பெரிய அலுமினியத் தகரங்களையும், பாத்திரங்களையும் சேகரித்து வருவதாகவும், இதற்குப் பொதுமக்களும் உதவி புரியவேண்டுமெனவும் ஜெய்ப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## குறிபார்த்துச் சூடு

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்தில் குவாரிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் வேலை செய்துகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் குறி பார்த்துச் சுட்டனர். சேதவிபரம் தெரியவில்லை.

## சடலங்கள் பொறுப்பேற்க ச. செ. சிலுவை தயக்கம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா கோழியாகுளப் பகுதியில்விடுதலைப்புலிகளின் தாக்குதலால் பலியான பதினாறு சிறிலங்கா இராணுவத்தினரின் சடலங்களைப் பொறுப்பேற்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தயக்கம் காட்டியுள்ளது.

இராணுவத்தினரின் சடலங்களைக் கையளிப்பதற்கு விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்தபோதிலும் வவுனியாப் பகுதியில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் விமானத்தாக்குதல்களைக் காரணங்காட்டி வவுனியாவில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோருக்கான தற்காலிக தபாலகப் பிரிவு

(வேலணை)

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாண நகரத்திலும் அதனை அண்டிய ஏனைய கிராமப் பகுதிகளிலும் அகதிகள் முகாம்களிலும் தங்கியிருக்கும் மக்களின் வசதி கருதி யாழ்ப்பாண பிராந்திய அஞ்சல் பகுதியினர் யாழ். பிரதம அஞ்சல அலுவலகத்தில் தற்காலிக அஞ்சல அலுவலக பிரிவைத் திறந்திருக்கின்றனர். வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய அஞ்சல் அலுவலகங்களே தனித்தனி (4 ஆம் பக்கம் பார்க்க)

## இரு அதிகாரிகள் உட்பட 18 இராணுவம் பலி

(கொழும்பு)

கோழியாகுளப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த மோதலில் இரு அதிகாரிகள் உட்பட பதினெட்டு சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அநுராதபுர மாவட்டத்தில் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி மேலும் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## வீரவணக்கம்

### கஜன்
### ஜெறாட்
### ஜீவன்

(யாழ்ப்பாணம்)

வவுனியா, கோழியகுளப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரவேங்கைகள் ஜெராட், கஜன் ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர்.

அதிகாலை 1 50 மணியளவில் சுகயீனம் காரணமாக ஜீவன் (கணபதிப்பிள்ளை செந்தில்ராஜ் தேவிபுரம், மொறக் கொட்டாஞ்சேனை) என்பவர் இயற்கை மரணமெய்தியுள்ளார்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## கொக்கட்டிச்சோலையில் இரு தமிழர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோ குழுவினரும் இணைந்து பொதுமக்கள் மீது பதுங்கித் தாக்குதல் மேற்கொண்டதில் இரண்டு தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை காலை ஏழு மணியளவில் கொக்கட்டிச்சோலை இராணுவத்தினரும், ரெலோகுழுவினரும் இணைந்து பண்டாரியா வெளி என்னுமிடத்தில் பதுங்கித் தாக்குதல் மேற்கொண் (4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பரவலாக விமானக் குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நேற்றும் சிறிலங்கா விமானப் படை விமானங்களும், ஹெலிகொப்ரர்களும தொடர்ச்சியான விமானத் தாக்குதல்களை மேற்கொண்டன

நேற்று அதிகாலை 5.30 மணிதொடக்கம் மாலை வரை சிறிலங்கா விமானப்படையை சேர்ந்த இரண்டு குண்டுவீச்சு விமானங்கள், இரண்டு ஹெலிகொப்ரர்கள், ஒரு அவ்ரோ விமானம் ஆகியன இணைந்து வவுனியா மாவட்டத்திலுள்ள (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின்வரலாற்றைகூறும் வாஞ்சியின் தமிழரின்தாகம்

(நெல்லியடி)

"தமிழ் மாணவர்களுக்கென வெளிவந்திருக்கும் வரலாற்றுப் பாடப் புத்தகத்தில் சிங்களம் மணக்கிறது. இந்த வரலாற்றுப் புத்தகங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும். எட்வின் சில்வா, சோமலதா மற்றும் இரு சிங்களவர்களால் எழுதப்பட்ட இந்த நூல்களை ஒரு தமிழரும், ஒரு முஸ்லிமும் தமிழாக்கம் செய்துள்ளனர். இந் நிலையில் தமிழ் மக்களின் வரலாற்றை எடுத்துக்காட்டும் நூலாக வெளிவந்துள்ளது கவிஞர் வாஞ்சிநாதனின் தமிழரின் தாகம் நூலாகும்" இவ்வாறு குறிப்பிட்டார் வெளிக்கள உத்தியோ (4ஆம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டித்துறை மீது கடும் பீரங்கித்தாக்கு

### ஆறு பொதுமக்கள் காயம்; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்தும், கடற்படையினரின் பீரங்கிப் படகுகளில் இருந்தும் வல்வெட்டித்துறை, தொண்டமானாறு பகுதிகளை நோக்கி நேற்றும், நேற்றுமுன்தினமும் மேற்கொள்ளப்பட்ட ஆட்லறி ஷெல், கனோன் ஷெல், 50 கலிபர் தாக்குதல்களால் ஆறு பொதுமக்கள் படுகாயமடைந்ததுடன் இரண்டு வீடுகளும் சேதமுற்றன

நேற்று முன்தினமிரவு 10·15 மணிமுதல் 11·10 மணிவரை வல்வெட்டித்துறை, தொண்டமானாறு பகுதிகளை நோக்கி (4ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய தேர்தல் களத்தில் தேசிய கட்சிகளின் வியூகங்கள்

இந்தியாவின் பத்தாவது பொதுத் தேர்தல் மாத இறுதியில் நடைபெறப் போகும் இத்தருணத்தில் தேசிய அளவில் ஒன்பது கட்சிகள் அங்கீகாரம் பெற்றுள்ளன. இவற்றுள் ஐந்து பிரதான கட்சிகள் தமது தேர்தல் வியூகத்தை பல்வேறு வகையில் அமைத்துள்ளன. இக்கட்சிகளின் செல்வாக்குள்ள பிரதேசங்கள் எவை என்பது குறித்தும் இந்திய பத்திரிகையாளர்கள் சில தகவல்களை கொடுத்துள்ளனர்

### இந்திரா காங்கிரஸ்

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் இந்திரா காங்கிரஸில் மொத்தம் 195 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். இதில் வடக்கில் 38 பேரும், 109 பேர் தெற்கிலும், 17பேர் கிழக்கிலும். 31 பேர் மேற்கிலும் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். கடந்த தேர்தலில் இக்கட்சி பெற்ற வாக்குகளின் சதவீதம் 39.33 ஆகும். தேசிய அங்கீகாரம் பெற்ற தலைவராக ராஜீவ் காந்தி இருந்தாலும், சென்ற தோல்விக்குப் பின் அவர் திறன் குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஆனால் பிராந்திய தலைவர்களினது செல்வாக்கும் நிதி வலுவும் இவர்களுக்கு உண்டு. கிராமப்புற உயர் சாதியினர், நகரவாசிகள், தாழ்த்தப்பட்டோரது வாக்குகளை இக்கட்சி எதிர்பார்க்கின்றது. இத்தேர்தலின் போது இந்தியவின் தென்பகுதியை தமது பிரதான தளமாக வைத்துக் கொண்டு வடக்கில் தேர்தல் வெற்றியைப் பெறும்வகையில் தேர்தல் வியூகம் ஒன்றை அமைத்து செயற்பட எண்ணியுள்ளது

### ஜனதாதளம்

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் ஜனதாதளத்தில மொத்தம் 76 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். இதில் வடக்கில் 61 பேரும் கிழக்கில் 9 பேரும், 6 பேர் மேற்கிலும் இருந்து தெரிவு செய்யப்பட்டனர் கடந்த தேர்தலில் இக்கட்சி பெற்ற வாக்குகளின் சதவீதம் 17 73 ஆகும். உறுதியான தலைவராக வி. பி. சிங் இருக்கிறார். ஆனால் அடி நிலை ஊழியர்கள் கொண்ட கட்டமைப்பு இக்கட்சிக்கு இல்லை பிற்படுத்தப்பட்டவர்களினதும், முஸ்லிம்களினதும் கூட்டுவாக்குகளை இக்கட்சி எதிர்பார்க்கின்றது. உத்தரப்பிரதேசத்திலும், பீகாரிலும் இவர்களுக்கு கூடிய பலம் உண்டு. பிறபடுத்தப்பட்டவர்களின் சமூக நிலையை வலியுறுத்தி, முஸ்லிம்களின பாபர் மசூதியையும் தமது பக்கம் வைத்துக் கொண்டு தேர்தல் வெற்றியை பெறும் வகையில் வியூகம் ஒன்றை அமைத்துச்செயற்பட எண்ணியுள்ளது.

### பாரதீய ஜனதாக் கட்சி

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் பாரதீய ஜனதாக் கட்சியில மொத்தம் 86 பாராளுமன்ற உறுப்பினர் இருந்தார்கள். இதில் வடக்கில் 64 பேரும், 22 பேர் மேற்கிலும் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். கடந்த தேர்தலில் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 11 56 ஆகும். கட்சிக்குள் கருத்து வேற்றுமைகள் இல்லாத தலைவராக எல். கே. அத்வானி இருக்கிறார். நிதி வசதி, தொண்டர்களை கொண்ட கட்சியாக உள்ளது. ஆனால் ஆளும் மாநிலங்களிலேயே பலத்தை இழந்து வருகிறது. ஓரளவு நகர வர்த்தக வகுப்பினர்களது ஆதரவுகளை இக்கட்சி எதிர்பார்க்கிறது.

இந்து தேசியத்தையும், அயோத்திப் பிரச்சினையையும் மையமாக வைத்துக் கொண்டு தேர்தல் வெற்றியைப் பெறும் வகையில் தேர்தல் வியூகத்தை அமைத்து செயற்பட எண்ணியுள்ளது.

### இடதுசாரிகள்

ஒன்பதாவது பாராளுமன்றத்தில் இடதுசாரிகளில் மொத்தம் 45 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். இதில் வடக்கில் 9 பேரும் தெற்கில் 3பேரும், கிழக்கில் 32 பேரும், மேற்கில் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டனர். கடந்த தேர்தலில் இக்கட்சி பெற்ற வாக்குகளின் சதவீதம் 8.93 ஆகும். இக்கட்சியில் மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு தவிர மற்றவர்கள் செல்வாக்கற்றவர்கள். தொண்டர்கள் கொண்ட அமைப்பாக இருந்தாலும் போதியளவு ஆதரவில்லை. கிழக்கிலும், கேரளாவிலும் இக்கட்சி வாக்குகளை எதிர்பார்க்கிறது வி பி சிங்கின் ஆதரவுடன், தேசிய முன்னணியோடு தொகுதி உடன்பாடு செய்து வடக்கில் பலம் பெறுவது என்ற செய்பாட்டை வைத்து செயற்பட எண்ணியுள்ளது.

### ஜனதாதளம் (எஸ்)

முன்னைய பாராளுமன்றத்தில்ஜனதாதளம்எஸ்ஸில் மொத்தம் 54 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். இதில் வடக்கில் 39 பேரும், கிழக்கில் 5 பேரும், மேற்கில் 10 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். கடந்த தேர்தலில் இக் கட்சி பெற்ற வாக்குகளின் சதவீதம் 17.73 ஆகும். சந்திரசேகர் தலைமையில் உள்ள இக்கட்சி இவரின் தனிப்பட்ட பலத்தை மட்டுமே கொண்டுள்ளது. அமைப்பில்லாத போதும் இந்திரா காங்கிரஸ் ஜனதாதள வாக்குகளை பிரித்து தாம் பெறுவதற்கு இக்கட்சி செயற்பட்டுவருகிறது. சந்திரசேகரை முடிந்த அளவிற்கு பயன்படுத்துவது என்ற கொள்கையை பிரதானமாகக் கொண்டு தேர்தல் வெற்றியை பெறும் வகையில் வியூகத்தை அமைத்து செயற்பட எண்ணியுள்ளது.

## ராஜீவ், வி. பி. சிங் மீது சந்திரசேகர் குற்றச்சாட்டு

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள்குறித்துப் பாராமுகமாக இருப்பதாக வி பி. சிங்மீதும், ராஜீவ் காந்திமீதும் பிரதம மந்திரி சந்திரசேகர் குற்றம் சாட்டியுள்ளார்.

மதம், மற்றும் ஜாதியின் பெயரால் நாட்டைப் பிளவு படுத்தப் பல்வேறு அரசியல் கட்சிகள் முயல்வதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். ஹரியானாவில் கூட்டத்தில் பேசும்போதே சந்திரசேகர் மேற்கண்டவாறுதெரிவித்தார்

அமெரிக்க ஜனாதிபதி

## ஜோர்ஜ்புஷ் யோசனையை செனட்சபை நிராகரிப்பு

(வாஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு அமெரிக்காவின் இராணுவம் மற்றும் பொருளாதார உதவிகளை மறுக்கும் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற அமெரிக்க செனற்குழு ஒன்று நிராகரித்து விட்டது.

ஆசிய - பசுபிக் விவகாரங்களுக்கானஅந்தக்குழு அதன் இடைக்கால அறிக்கையில் பாகிஸ்தானிடம் அணுசாதனம் எதுவும் இல்லை என்ற வருடாந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டல்தான் 1991ஆம் நிதிஆண்டுக்கான நிதிஉதவியை வழங்கலாம் என்று கூறியிருக்கிறது.

இவ்வகையான சான்றிதழ் ஒன்றைப் பெறமுடியாமல் போனதால்தான் 1991ஆம் ஆண்டுக்கான உதவிகளைப் பாகிஸ்தான் பெறமுடியாமல் போனது,

## 1991 ஆண்டு பரீட்சைத் திகதிகள் அறிவிப்பு

(கொழும்பு)

1991 ஆண்டிற்கான க.பொ த உயர்தர சாதாரணதர ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான திகதிகளை பரீட்சைத்திணைக்களம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இதன்படி, க பொ த உயர்தரப் பரீட்சை ஒகஸ்ட் மாதம் மூன்றாம் திகதியில் இருந்து இருபத்திஏழாம் திகதி வரையும், சாதாரணதரப் பரீட்சை டிசம்பர் மாதம் ஒன்பதாம் திகதியில் இருந்து பதினெட்டாம் திகதி வரையும் ஐந்தாம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சைகள் ஒகஸ்ட் மாதம் பதினோராம் திகதியும் நடைபெறுவதாக பரீட்சைத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாக். பிரதமர் பங்களாதேஷ் விஜயம்

புயலினால் பாதிக்கப்பட்ட பங்களாதேஷ மக்களுக்கு பாகிஸ்தான் அதிகமாக உதவும் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரிப் குறிப்பிட்டுள்ளார். நேற்று முன் தினம் டாக்கா போய்ச்சேர்ந்த பாகிஸ்தான் பிரதமர் மேலும்பங்களாதேசத்தின் துயரில் தாமும் பங்கேபதாகக்குறிப்பிட்டார் பாகிஸ்தான் இரண்டு ஹெலிகொப்டர் விமனங்களையும், மருந்துப் பொருள்களையும் உடனடியாக பங்களாதேஷிற்கு அளித்துள்ளது

## கோதாவரியில் 60 பேர் மரணம்

ஆந்திராவில் கோதாவரி ஆற்றில் படகொன்றுகவிழ்ந்து 27 பெண்கள் உட்பட 60பேர் நீரில் மூழ்கிவிட்டதாக அஞ்சப்படுகிறது. மேலும் 40 பயணிகள் மீட்கப்பட்டனர். இவர்களில் சிலர் நீந்திக்கரையடைந்தனர்.

40 பயணிகளை ஏற்றிச்செல்லக்கூடிய இப்படகு 80க்கும் அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்றதால் ஆற்றில் கவிழ்ந்தது.

### சிறிலங்காவில்

(3 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இன்னுமொருபக்கம். 'ஜனநாயக'த் தேர்தல்களை நாட்டு மக்கள் இன்னமும் மறந்து விடவில்லை என்பதையும், புள்ளடிகள் போடுவதற்கு மக்களுக்கு இன்னமும் சந்தர்ப்பம் இருக்கிறது என்பதையும் மட்டுமே இந்த உள்ளுராட்சித் தேர்தல் உணர்த்துவதாக அமையும் எனலாம்.


## அரசாங்க அறிவித்தல்

இரண்டாம் கந்தாயத்துக்கான மருந்து வகைகள் இதுவரைபெற்றுக்கொள்ளாத வைத்திய நிறுவனங்கள், யாழ்/சு. சே பி. பணிப்பாளரது மருந்துக்களஞ்சியப் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்டு, தமது தேவைகளைப் பெற்றுக்கொள்ளவும். மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னராகத் தத்தமக்கு வசதியான திகதியைக் களஞ்சியப் பொறுப்பதிகாரியுடன் முன் கூட்டியே தொடர்பு கொண்டு தீர்மானித்துக் கொள்ளவும்.

இவ்வாறே அச்சிட்ட படிவங்கள், காகிதாதிகளையும் எனது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர் ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(B/ 2476)

## யாழ். வர்த்தகர் சங்கம்
## பொதுக் கூட்டம்

சங்கப் பொதுக்கூட்டம் 12-05-1991 ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணிக்கு, யாழ் / இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

உறுப்பினர்கள் 1991 தை மாதம் தொடக்கம் சந்தாப் பணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் தவறாது சமுகம் கொடுக்கவும்.

சி. நமசிவாயம்
பொதுச் செயலாளர்.

க. வி. குலரத்தினம்
தலைவர்.

(R-1377)





**1991 - 05 - 07**

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் கரடியனாறில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**பட்டாபி** (செல்வராசா ரூபாகரன் - மகிழடித்தீவு, கொக்கட்டிச் சோலை, மட்டக்களப்பு)

1987 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெடிவிபத்தின் போது எமைப் பிரிந்த

**அல்வின்** (அமிர்தலிங்கம் சற்குணராசா - வதிரி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

எண்ணம் எல்லாம்
நிறைந்தீர்கள்-இந்த
மண்ணின் மீட்பிற்காய்
இன்னுயிரைச் சொரிந்தவர்கள்-எம்
கண்ணின் மணியாகக்
காலமெல்லாம் வாழ்ந்தவர்கள்-எதிரி
மண்டியிட வைத்துவிட்டீர்!
மலைபோல பலம் சேர்த்தீர்!!
விண் அதிரும் வரை உம் நாமம்-இவ்
வையத்தில் எதிரொலிக்கும்.

– விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2475)

### சிந்தனைக்கு

செயல், பயனுள்ளதாக இருக்க, தெளிவாக வகுத்து ஏற்கப்பட்ட குறிக்கோள்களை நோக்கச் செலுத்தப்பட வேண்டும்.

— ஜவஹர்லால்நேரு


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 07-05-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண்: 05


# ஒடுக்கப்பட்டோரை யூ என் பி ஓ பாதுகாக்குமா?

பிரதிநிதித்துவப்படாத நாடுகள், மற்றும் மக்கள் அமைப்புக்களின் ஸ்தாபனம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கு மாற்றீடாக அமையும் இந்த ஸ்தாபனத்தில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் பிரதிநிதித்துவம் பெறாத சிறுபான்மை இனங்கள், ஆக்கிரமிப்புக்குள்ளான பிரதேசங்களின் பிரதிநிதிகள் இவ் அமைப்பில் இடம் பெறுவர் எனவும் தெரிகின்றது யூ என். பி. ஓ (U. N P.O) எனறழைக்கப்படும் இந்த ஸ்தாபனத்தின் பட்டயம் கடந்த பெப்ரவரி ஹேக் நகரில் கைச்சாத்தாகியது.

ஒடுக்கப்பட்ட மக்களினது சுயநிர்ணய உரிமை. சிறுபான்மையினரின் நலன்கள், சுதந்திரம் வேண்டிப் போராடும் மக்களுக்கு உதவுதல் ஆகியன அந்த அமைப்பினது பட்டயத்தின் முக்கிய அம்சங்களாகும்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஐ நா. சபை உருவாகியபோது அன்று நாடுகள் என அங்கீகரிக்கப்பட்டவையும் அவற்றில் ஐ நா. சபையில் சேருவதற்கு விருப்பம் கொண்டிருந்த நாடுகளும் ஐ. நா. சபையில் அங்கத்துவம் பெற்றன. அத்தோடு காலனியாதிக்கத்தில் இருந்து விடுபட்ட நாடுகள் பலவும் அங்கத்துவம் பெற்றன.

அதேவேளை, இக்காலனியாதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகள் பெரும்பாலானவற்றின் எல்லைகள் ஐரோப்பிய நாடுகளினால் தீர்மானிக்கப்பட்டவையாக இருந்தன. அதாவது தமது ஆட்சி வசதிக்கேற்ற வகையில் குடியேற்ற நாடுகளின் எல்லைகள் அமைக்கப்பட்டன.

பல நூறு சமஸ்தானங்களையும், மன்னர்களையும் கொண்டிருந்த இந்தியாவை ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தவர்கள் பிரித்தானியர்கள் ஆகும். அதே போன்று 'இருண்ட கண்டம்' என அழைக்கப்பட்ட ஆபிரிக்காவை 1884 ஆம் ஆண்டு பேர்ளின் மகாநாட்டின் மூலம் தமக்குள் அகல நெடுங்கோட்டு அடிப்படையில் பங்கு போட்டுக் கொண்டவர்களும் ஐரோப்பியர்கள் ஆகும்.

இந்நிலையில், இரண்டாம் உலக மகாயுத்தத்தைத் தொடர்ந்து காலனியாதிக்க வாதிகளால் உருவாக்கப் பட்ட நாடுகள் சுதந்திரம் பெற்ற போது அங்கு பெரும்பான்மை இனங்களின் ஆட்சி ஏற்பட்டது. அப்பகுதிகளில் சிறுபான்மையாக இருந்த தேசிய இனங்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன.

அதேவேளை, ஐ. நா. சபை தனது அமைப்பில் அங்கத்துவம் பெற்ற நாடுகளில் ஏற்பட்ட தேசிய இனங்களின் பிரச்சினைகளை உள்நாட்டுப் பிரச்சினை என்ற ரீதியில் தலையீடு செய்யாமல் தட்டிக்கழித்தது. அத்தோடு வல்லரசுகளுக்கு இடையில் நிலவிய கெடுபிடி யுத்தத்தினால் இவ்வாறான விடயங்களில் தலையீடு செய்வதினால் ஐ. நா. சபையே கலைந்து விடும் அபாயமும் இருந்தது. இதனால் தேசிய இனங்களின் எழுச்சிகள் மிருகத்தனமாக அடக்கப்படும் போதும் கேட்பாரற்ற நிலையே உலகில் இருந்து வந்தது.

இந்நிலையில் தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள யூ. என். பி ஓவின் பங்கு பணி முக்கியமானதாகும். அரசுக்களின் இறைமை தன்னாதிக்கம் என்ற ரீதியில் தேசிய இனங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக இந்த அமைப்புக் குரல் கொடுப்பதையும் அவர்களுக்கு உதவி வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

ஒடுக்கப்பட்டவர்களுக்கான இந்த ஸ்தாபனம் இன்று பிரதானமாக சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. ஆனால இன்று பெருமளவில் ஒடுக்கப்படும் மக்கள் மூன்றாம் உலக நாடுகளிலேயே வாழ்கின்றார்கள்.

இந்நிலையில், மூன்றாம் உலக நாடுகளில் உள்ள ஒடுக்கப்படும் மக்களின் பிரதிநிதிகளையும், எவருக்கும் சிறப்பதிகாரம் வழங்காத சட்ட திட்டங்களையும் கொண்டிருக்கும் பட்சத்திலேயே இவ் அமைப்பு தனது உண்மையான நோக்கில் செயற்பட முடியும். இல்லாவிடில் இன்றைய ஐ. நா. சபை போன்று ஒரு கையாலாகாத ஸ்தாபனமாகவே இந்த அமைப்பும் மாறிவிடும்.

# சிறிலங்காவில் உள்ளூராட்சி தேர்தல்

# பிரேமதாசாவின் பரீட்சைக் களம்

ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு, ஒற்றையாட்சி என்று பலமாகப் பேசப்பட்ட போதிலும் இலங்கைத் தீவில் இவை நடைமுறையில் இல்லை என்பது வெளிப்படை. இலங்கைத் தீவு ஒரு நிர்வாகத்தின் கீழ், ஒரு ஆட்சி அமைப்பின் கீழ், நிர்வகிக்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவது போலவே தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கு அப்பால் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்கள் அமைகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியினுள் பிரேமதாசாவின் பலத்தை எடைபோடும் அளவு கோலாகவும், பிரேமதாசா அரசாங்கத்திற்கு நாட்டு மக்களிடம் இருக்கும் செல்வாக்கை கோடி காட்டும் உரை கல்லாகவும் இத் தேர்தல் அமையக் கூடும். இதனால் இது ஒரு குட்டிப் பொதுத்தேர்தல் என்றும் அழைக்கப்படலாம். தமிழ் மக்கள் முன்னெடுக்கும் போராட்டம் பற்றிய சிரத்தையான சிந்தனையில்லாமல் தென்னிலங்கை அரசியற் கட்சிகளும் வாக்கு வேட்டைக் களத்தில் புகுந்துள்ளன. 'புனரமைக்கப்பட்ட ஜனநாயகத்தின்' கீழ் கிராமம் தோறும் ஜனாதிபதிகளை உருவாக்கப் போவதாக கங்கணம் கட்டி நிற்கும் திரு பிரேமதாசா அவர்கள் ''இனப்பிரச்சினைக்கான தீர்வு தேடுவதைக்கூட'' தேர்தல் முடிவுவரை தள்ளி வைத்து இருப்பதாக அறிவித்திருக்கிறார்.

இந்த நிலையில் தென்னிலங்கைப் பகுதிகளில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்கள் பற்றிப் பார்ப்பது பயனுடையதாகலாம்.

**உள்ளூராட்சித் தேர்தல்கள்**

1982 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அதாவது சுமார் ஒன்பது ஆண்டுகளின் பின்னர் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப் படப் போகின்றன. மாநகர சபைகள், நகரசபைகள் பிரதேச சபைகள் என மொத்தம் 237 உள்ளூராட்சி சபைகளுக்கு 1991 மே 11 இல் நடக்கவிருக்கும் தேர்தலில் 3542 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அரசியல் கட்சிகளின் அடிப்படையில் இடம்பெறும் தேர்தல் என்பதால் ஒவ்வொரு கட்சியும் 4618 வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

40 சத வீதமான இடங்கள் இளைஞர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற நிலையில் 18-35 வயதுக்கும் இடைப்பட்ட சுமார் 5.500 பேர் போட்டியிடும் இத் தேர்தலுக்காக அவசரகால விதிகள் சில தளர்த்தப்பட்டிருப்பதுடன் தேர்தல் கண்காணிப்பிற்காக 'சார்க்' நாடுகளின் அவதானிகள் குழுவும் அழைக்கப்பட்டிருக்கிறது.

இத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இணைந்து போட்டியிடுகிறது எனினும் நுவரெலியா, ஹட்டன், டிககோயா, அம்பேகமுவ, தலவாக்கலை - லிந்துல, போன்ற தமிழ் வாக்காளர்களைப் பெருமளவு கொண்டிருக்கும் பிரதேசங்களில் இ. தொ. காவின் சேவல் சின்னத்தின் கீழேயே ஐ தே கட்சி போட்டியிட முன்வந்துள்ளது.

**பிரேமதாசாவின் பரீட்சைக் களம்**

இந்தக் குட்டிப் பொதுத் தேர்தல் ஜனாதிபதி பிரேமதாசாவைப் பொறுத்த வரையில் ஒரு பரீட்சைக் களமாகவே இருக்கும் எனலாம். 1988இன் இறுதிப் பகுதியில் நிலவிய அரசியல் சூழலில் பெருமளவு வாக்காளர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தாத நிலையில் ஆளும் கட்சி மோசடியான தேர்தலொன்றின் கீழ் வெற்றி பெற்றதாக எதிர்க்கட்சிகள் புகார்கள் கிளப்பின. ஜனாதிபதி தேர்தலின் போதான நடவடிக்கைகள் குறித்து விசாரிக்கும் ஆணைக் குழுவின் விசாரணைகள் தொடரும் இச் சந்தர்ப்பத்திலே ஆளுமகட்சி தனது உண்மையான மக்கள் ஆதரவை நிரூபித்துக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பத்து இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தினால் பிரபலம் பெற்ற பிரேமதாசா தன் ஆட்சிக் காலத்தில் 60 000க்கும் மேற்பட்ட இளைஞர்களைக் கொன்று குவித்து, மனித உரிமைகளைக் குழிதோண்டிப் புதைத்து ஜே. வி பியினரை அடக்கி விட்டதாக கருதப்படும் சூழலைத் தோற்றுவித்துள்ளார்.

ஜே. வி. பியினரின் ஆயுத முனையிலிருந்து ஜனநாயகத்தையும், சுபீட்சத்தையும் மீட்டெடுத்திருப்பதாக பிரேமதாசாவும், அவரது அமைச்சரவைச் சகாக்களும் கூறி வரும் கருத்துக்கள் உண்மையிலேயே எத்தகைய மக்களாதரவைப் பெற்றுக் கொண்டுள்ளன? தென்னிலங்கைப் பகுதிகளில் அடிப்படை மனித உரிமைகளை அவமதிக்கும் வகையில் செயற்பட்ட ஆயுதப்படையினர் செயல்களை பரந்துபட்ட மக்கள் எப்படிப் புரிந்து கொண்டுள்ளனர் என்பன போன்ற கேள்விகளுக்கு விடை தேடும் களமாக இத் தேர்தல் கருதப்படக்கூடும். ஆதலினால் இத் தேர்தலின் வெற்றிகள் பற்றி திரு. பிரேமதாசாவும் அவரது அரசும் அதிக அக்கறை காட்ட வேண்டியதாகிறது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே குடும்பச் செல்வாக்கும், அரசியற் பின்னணியும் கொண்ட லலித் அத்துலத்முதலி, காமினி திசநாயக்கா போன்றோரை ஓரங்கட்டி தனது ஆளுமையை மட்டும் நிலைநாட்ட முயலும் திரு. பிரேமதாசா அவர்களுக்கு இருக்கக் கூடிய பொதுசன ஆதரவின் தகுந்த அளவுகோலாகவும் இத் தேர்தல் முடிவுகள் அமையப் போகின்றன. அத்துடன் கடந்த இரண்டாண்டுகால ஆட்சிக் காலத்தின் ''சாதனை''களுக்கு மக்கள் காட்டும் உணர்வலைகளின் களமாகவும் இது அமைந்து விடப் போகிறது.

எனவேதான் ஐ. தே. கவின் தேர்தல் பரப்புரைகளில், ஜே. வி பியினரை அடக்கியமை பற்றிய வெற்றிக் கூச்சல், அபிவிருத்தி, கிராமங்களை நோக்கி நகரும் நடமாடும் ஜனாதிபதி செயலகம் போன்ற அம்சங்கள் முக்கியத்துவம் பெறும் என எதிர் பார்க்கலாம்.

மறுபுறமாக மனித உரிமை மீறல்கள, பதினான்கு ஆண்டுகளாக தொடரும் ஐ. தே. க. ஆட்சியின் கொடூரக் குணநலன்கள், விலைவாசி மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு போன்றதான அம்சங்களை எதிர்க்கட்சிகள் தேர்தலில் முக்கியத்துவப்படுத்தக் கூடும். இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் ஐக்கியம் - பிரதேச ஒருமைப்பாடு என்றெல்லாம் பேசிக்கொண்டே - தமது நாட்டு மக்களின் ஒரு பகுதியினர் எனத் தமிழ் மக்களை வர்ணித்துக் கொண்டே - அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஆபத்துகள் நெருக்கடிகள் என்பன பற்றி அலட்சிய மனப்பான்மையுடன் சிறிலங்கா அரசு மட்டுமல்ல எதிர்க்கட்சிகளும் நடந்து கொண்டு வருகின்றன என்பதுதான்.

**கொழும்பிலிருக்கும் முன்னாள் தமிழ்க் குழுக்கள்**

இவ்வாறாக தென்னிலங்கையில நடைபெறும் பதவிப் போட்டியில் யாரை ஆதரித்தால் தமக்கு நன்மை கிடைக்கும் என்ற ஆராய்ச்சியில் முன்னாள் தமிழ்க் குழுக்கள் தீவிர கவனம்செலுத்துவதாகத் தெரிகிறது. தமிழ் மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் அவல நிகழ்வுகள் பற்றியோ அல்லது இந்த மண்ணில வாழும் மக்கள் முன்னெடுக்கும் தீவிரப் போராட்டத்தின் நியாயம் பற்றியோ பேசப் புகுந்தால் அரசாங்கத்திடமிருந்து பாதுகாப்பு அச்சுறுத்தல் வந்து விடுமோ - தமது வசதிகளை இழந்து விட நேர்ந்து விடுமோ என அஞ்சித் தொடை நடுங்கும் ஒரு சாரார், உளப்பூர்வமாக எதிர்க்கட்சியினரை ஆதரித்தாலும் வெளிப்படையாகச் சொல்லத் தயங்கி தமக்குள்ளேயே மழுப்பிக்கொள்ளும் ஒரு சாரார், மனச்சாட்சி மற்றும் நியாயங்களை தூக்கி புதைத்து விட்டு ஜனாதிபதி இனப் பிரச்சினைக்கு நியாயமான நிரந்தரத் தீர்வு காண முனைகிறார் என்ற பொய்யான கற்பனையை வளர்க்கும் ஒரு சாரார். இப்படியாக தமிழர்களின் சார்பாக குரல் கொடுப்பதாக கூறிக்கொள்வோர் கொழும்பில் தாமும் குழம்பி, மற்றவர்களையும் குழப்பித் திரிவதாகத் தெரியவருகிறது.

**எதிர்க்கட்சிகளும், உள்ளூராட்சித் தேர்தலும்**

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான பலமான ஐக்கிய முன்னணி கட்டுவதற்கு அடித்தளமாக இத் தேர்தல் பயன்படலாம் என்ற பலரது நம்பிக்கையைப் பொய்யாக்கி விட்டது எதிர்க்கட்சிகளின் நிலை, மரபுவாத மார்க்சிஸ்டுகள், கம்யூனிஸ்ட்டுகள், சமசமாஜிகள் என்போரது அரவணைப்பில் தனது முதன்மையை பேண விழையும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினால் ஏனைய உதிரிக்கட்சிகளை இணைக்க முடியவில்லை.

ஜே. வி. பி. யினர் முன்னெடுத்த ஆயுதப் போராட்டப் பாதையை வன்முறைஎனகூறி ஒதுக்கி விட்டு, வாக்குகளின் பலத்தால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற கற்பனையுடன் தமது செல்வாக்கை நிலைநாட்ட மக்கள் அரங்கில் மேடை போட உதிரிக்கட்சிகள் வரிந்து கொண்டுள்ளன மேலும் அரசாங்கம் ஜனநாயக உரிமைகளை மதிக்கிறது - பேணிப்பாதுகாக்கிறது என்னும் மாயத்தோற்றத்தை உருவாக்கவே இந்த எதிர்க்கட்சிகள் பயன்படுகின்றன.

எது எப்படியாயினும் நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களின் மூலம் பாரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படப்போவதில்லை என்பது ஒருபக்கம், எந்தக் கட்சி வெற்றி பெற்று உள்ளூராட்சி சபையின் நிர்வாகப் பொறுப்பை கைப்பற்றினாலும் கூட அவற்றால் பெரிய நன்மை எதையும் சாதித்து விடப் போவதில்லை என்பது

— இளையவன்

(2ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த.(சா-த)பரீட்சைநடக்கும்வரை

# மாணவர் உயர்வகுப்பில கல்வி கற்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தடைப்பட்டுள்ள சாதாரணதரப்பரீட்சை நடக்கும் வரைசகும அம்மாணவர்களை உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கு அனுமதிப்பதற்கான ஒழுங்குகளை யாழ் கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் வடக்கில் நடாத்தப்படாது பிற்போடப்பட்டுவரும் க.பொ.த. சாதாரணதரவகுப்பு மாணவர்கள் அனைவரும் உயர்தர வகுப்பில் கற்பதற்கு தகுதியுள்ளவர்களாகக்கருதப்பட்டே உயர்தர வகுப்பிற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் தத்தமது பாடசாலைகளில் உயர்தர வகுப்பு இருப்பின் அதில தமது கல்வியைத்தாம் விரும்பும் துறையில் பயில அனுமதிக்கப்படுவர் எனவும் அதற்குமுன் தத்தமது அதிபர்களை மாணவர்கள் சந்திக்குமாறும் இம்மாணவர்கள் உயர்தரவகுப்பில் அனுமதிப்பதுபற்றி அந்தந்தப்பாடசாலை அதிபர்களேதீர்மானிப்பர் எனவும் உயர்தர வகுப்பினை வேறுபாடசாலைகளில் கற்க விரும்பும் மாணவர்கள் தாம் விரும்பும்பாடசாலைக்கு தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் இவர்களுக்கு அந்தந்த பாடசாலைகளில் தெரிவுப் பரீட்சை கணிதம், விஞ்ஞானம், சமூககல்வி, தமிழ் ஆகிய பாடங்களில் நடாத்தப்படும் எனவும் அதில் தேறியோர் அங்கு பயில அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆயினும்எதிர்வரும்ஆகஸ்ட் மாதம பரீட்சைத்திணைக்களத்தால் நடாத்தப்படவுள்ள சாதாரணதரப் பரீட்சையில் இவர்கள் தோற்றிப் போதிய பெறுபேற்றைப் பெற்றாலே தொடர்ந்து உயர்தரவகுப்பில் கற்க முடியும் எனவும் தவறின் இவர்கள மீண்டும் சாதாரணதர வகுப்பில் கற்றல் வேண்டும் எனவும அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பங்களாதேஷை மீண்டுமொரு சூறாவளி தாக்கும் அபாயம்

(டாக்கா)

சடுர் சூறாவளி தாக்கிய பங்களாதேஷை மற்றொரு சூறாவளி தாக்கியதைத் தொடர்ந்து உதவி வழங்கும் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை பங்களாதேஷைத்தாக்கிய கடுமையான புயலைப்போல மற்றொரு புயல் உருவாகக்கூடும் என்றும் வானிலை ஆராய்ச்சி நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

புயலால் மிகக் கடுமையான சேதத்திற்குள்ளாகிய சிற்றகொங்நகர் தரை மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் தொடர்புகொள்ள முடியமையால், கடந்த இரண்டு நாட்களாக அந்தப்பகுதிக்கு உணவு மற்றும் மருந்து வகைகளைக் கொண்டுசெலலமுடியவில்லை. கொந்தளித்துள்ள கடலும் கப்பல்களில் கரையோர நகரங்களுக்கு உணவுப்பொருள்களை எடுத்துச் செல்வதற்குத் தடையை ஏற்படுத்தியுள்ளது.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீரின்மூலம் பரவும் கொடிய நோய்களுக்கு 200 பேர்வரை பலியாகியுள்ளனர்.

பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்களுக்குக் கூடுதல் நிவாரணம் வழங்குமாறு பங்களாதேஷில் உள்ள மனிதநேய நிறுவனங்கள் உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

---

**இலங்கையில்**

எமது பிரதமர் சபையில் பல சந்தர்ப்பங்களில் சிறிலங்காப் பிரச்சினை குறித்து உரையாற்றியுள்ளார். ஆனால் அவரின் பேச்சுக்கள் செவிமடுக்கப்படவில்லை. சிறிலங்கா வெளிநாடுகளிலிருந்து பிரதிநிதிகளை அழைத்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அக்கறை செலுத்துவதில்லை. உலகத் தலைவர்கள் சிறிலங்கா தொடர்பாக ஒரு சர்வதேச மாநாட்டைக் கூட்ட வேண்டிய காலம் ஏற்படும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு என்றார் அவர்.

சிறிலங்கா அரசாங்கம் வடக்கில் நடப்பதை அவதானிக்க ஒருவரையும் அனுமதிப்பதில்லை. யாழ்ப்பாண ஆஸ்பத்திரியை அரசாங்க படைகள் குண்டுவீசித் தாக்கின. இப்படியான சம்பவங்கள் அங்கு தொடர்ந்தும் இடம் பெறுவதாகச் சொன்ன அவர் அவுஸ்திரேலியா இது குறித்து விழிப்பாக இருககிறது என்றும் தெரிவித்தார்.

---

**கொக்கட்டிச்சோலையில்**

டதில் தெய்வநாயகம் (வயது 20, பண்டாரியாவெளி) கணபதிப்பிள்ளை (வயது 23, பண்டாரியாவெளி) ஆகிய இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

---

**10 ஆம் திகதி**

லிஙகம் தெரிவித்துள்ளார்

இரண்டாம்தவணை ஆரம்பமாவது குறித்து பல்வேறு செய்திகள் வெளியானதைச் சுட்டிக்காட்டி எமது நிருபர் கேட்டபோதே உயர்தரப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகள் உட்பட சகல பாடசாலைகளும் இரண்டாம் தவணைக்காக வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் என அவர் தெரிவித்தார். (ச)

---

**இடம்பெயர்ந்த**

யாக திறக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு திறக்கப்பட்டுள்ள அஞ்சல் அலுவலகங்களைச் சேர்ந்த மக்கள் இங்கு சென்று தங்களுக்குரிய கடிதங்களை தினமும் காலை 9மணி முதல் 12மணி வரையில் பெற்றுக் கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (14)

---

**செயற்கைக்**

பூர் தொழிற்சாலையின் பதில் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்

இதேவேளை அண்மையில் இந்தியாவில் இருந்து சுமார் இருநூறு வரையிலான செயற்கைக் கால்களை இறக்குமதி செய்து ஒரு கன்னியாஸ்திரி மூலம் வவுனியா ஊடாகக் கொண்டுவர முற்பட்ட சமயம் அவை திருப்பிக் கொழும்புக்கே கொண்டுசெல்லும்படி இராணுவத்தினர் பணித்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றும் வடபகுதியைச்சேர்ந்தவர்கள் நூற்றைம்பதுபேருக்கு மேற்பட்டோருககுச் செயற்கைக்கால்கள் அவசரமாகப் பொருத்த வேண்டியுள்ளது. இவர்களுக்கு உள்ளூரில் தயாரித்தே பொருத்தத்திட்டமிட்டுள்ளதாக ஜெய்ப்பூர் உப தலைவர் கூறினார். (லோ)

# நாளை செஞ்சிலுவை செம்பிறைச் சங்க தினம்

(நல்லூர்)

அகில உலக செஞ்சிலுவை, செம்பிறை சங்கத் தினமாக நாளை கொண்டாடப்படவுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் பல நோயாளிகள் இரத்தப் பெருக்காலும், இரதத சோகையாலும் மரணமடைகிறார்கள்.

ஆகவே யாழ். செஞ்சிலுவைச் சங்கம், அதன் தினமான மே 8ஆந்திகதி இரத்த தானம் செய்ய முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆஸ்பத்திரிகளில் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் சுழற்சி முறையில் இரத்த தானம் வழங்க ஏற்பாடாகியுள்ளது.

# வீடுபார்க்கச் சென்றவர் சரவணையில் கைது

(யாழ்ப்பாணம்)

சரவணையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். சரவணையில் இருக்கும் தமது வீட்டைப் பார்வையிடுவதற்காக நேற்றுக்காலை அப்பகுதிக்குச்சென்ற நிதி (வயது40) என்ற குடும்பஸ்தரை மறைந்திருந்த சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்தனர். இவரும் மேலும் சிலரும் மேற்படி பகுதிக்குள் நுழைந்த சமயம் மறைவிடம் ஒன்றில் பதுங்கியிருந்த இராணுவத்தினரைக் கண்டதும் முன்னால் சென்ற மேற்படி குடும்பஸ்தர் இரு கைகளையும் உயர்த்திய படி நிற்க ஏனையோர் பின்னோக்கி ஓடித்தப்பி வந்துவிட்டனர் இக்குடும்பஸ்தரை இராணுவத்தினர் வந்து கூட்டிச் சென்றதாக தப்பி வந்தவர்கள் தெரிவித்தனர். (க)

---

**வவுனியாவில்**

பாலமோட்டை, கிழவிகுளம், கோழியாகுளம் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியான விமானத் தாக்குதல்களை மேற்கொண்டன.

இத்தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரம் கிடைக்கவில்லை.

---

**தமிழரின்**

கதத்ர் சிதம்பரநாதன் அவர்கள் நேற்று பிற்பகல் 3-30 மணியளவில் நெல்லியடியில் முறைசாரக் கல்விப் பிரிவு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ''தமிழரின் தாகம்'' நூல் அறிமுக விழாவில் ஆய்வுரை நிகழ்த்துகையிலேயே இவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விழாவில்உரையாற்றிய விடுதலைப்புலிகள்மக்கள்முன்னணிப் பிரமுகர் அரசண்ணா அவர்கள்கவிஞர்வாஞ்சிநாதன் அவர்கள் இந்திய இராணுவத்தின் சிறையில் இருந்தவர். சிறையில் இருக்கும்போது ஒரு கவிப்பரம்பரையையே உருவாக்கியவர் இவர். தன்னால் உருவாக்கப்பட்ட கவிஞர்களின் கவிதைகளையும் நூலவடிவில் கொண்டுவர முயற்சிக்கவேண்டும் என்றார்.

வடமராட்சி இராணுவப் பொறுப்பாளர் அர்ஜீன். மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஸ்ரனிஸ்லேஸ் உட்படபலர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

---

**சடலங்கள்**

வைத்துச் சடலங்களைக் கையேற்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மறுத்துள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் வைத்துச் சடலங்களைப் பொறுப்பேற்க செஞ்சிலுவைச் சங்கத்தினர் விருப்புள்ளதாகவும் தெரியவருகிறது. (மு)

# தங்கியுள்ள கோட்டங்களில் வரவுபதியக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்திற்குள் தங்கியிருக்கும் அதிபர்கள், ஆசிரியர்களைத் தற்போது தங்கியுள்ள பகுதிக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் தங்கள் தங்கள் வரவுகளைப் பதிவு செய்யுமாறு யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

கடந்த காலங்களில் வெளிமாவட்டங்களில் கடமையாற்றி இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்திற்கு வந்து மீண்டும் தத்தமது மாவட்டங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் உள்ள அதிபர்களும் ஆசிரியர்களும் யாழ் மாவட்டத்திற்குள் இடம் பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் தங்கியுள்ள அதிபர்களும் ஆசிரியர்களும் தற்போது தங்கியுள்ள இடங்களுக்கு அண்மையிலுள்ள கோட்டக் கல்வி அலுவலகத்தில் தத்தமதுவரவுகளைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதே நேரம் வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகம் தற்போது யாழ் மத்திய கல்லூரியில் இயங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

# தீவுப்பகுதி மாணவருக்கு கல்வி கற்க புதிய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்காக யாழ் நகரப் பாடசாலைகளில் மாலை நேர வகுப்புகளை நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதன் படி பாதிக்கப்பட்ட கொத்தணிக் குட்பட்ட பாடசாலைகளுக்கு ஒவ்வொரு நகரப்பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைக் கொத்தணிக் குட்பட்ட பாடசாலைகள் யாழ் மத்திய கல்லூரிக்கும் வேலணை கொத்தணிப் பாடசாலைகள் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திற்கும், புங்குடுதீவுக் கொத்தணிப் பாடசாலைகள் யாழ் சனமார்க்க வித்தியாசாலைக்கும், மண்டைதீவுக் கொத்தணிப் பாடசாலைகள் யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்திற்கும், காரைநகர் கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகள் யாழ் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்திற்கும் மாற்றப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

இதேவேளை இப்பகுதிகளிலிருந்து வேறு கோட்டங்களுக்கு இடம் பெயர்ந்துள்ள ஆசிரியர்களையும் மாணவர்களையும் தற்போது வதியும் இடத்திற்கு அண்மையில் உள்ள கோட்டக் கல்வி அதிகாரியை சந்தித்து தமக்குரிய பாடசாலைகளை ஏற்பாடு செய்து கொள்ளும் படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காகவேலணைக் கோட்டப்பிரிவு ஆசிரியர்கள். அதிபர்கள் கொத்தணி அதிபர்கள் ஆகியோரை மேற்படி கோட்டக்கல்வி அதிகாரியை யாழ் மத்திய கல்லூரியிலும் காரைநகர் ஆசிரியர், அதிபர்கள் கொத்தணி அதிபர்கள் ஆகியோரை பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரியை யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு சந்திக்குமாறு யாழ் பிராந்திய கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

---

**பிரான்ஸ் மருத்துவக்**

மரிக்கும் ஐக்கிய நாடுகள் சங்க உறுப்பினர்கள் இருவர் இந்திய உயர்ஸ்தானிகர் ஜாவைச் சந்தித்து இந்தச் சம்பவம் ஏற்படுத்திய கொடுமையான விளைவுகள் பற்றி எடுத்துக்கூறியுள்ளனர்.

மிகப்பெரிய அகதிமுகாமை நிர்வகித்துவரும் ஐ நா அதிகாரிகள் விலகிக்கொண்டால். அங்கு தங்கியிருக்கும் அப்பாவி மக்கள் பல புதிய இன்னல்களுக்கு ஆளாகக்கூடிய நிலை உருவாகலாம்.

# அதிபர் விபரம் கோருகிறார்

நேற்றுமுதல் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கும் க.பொ.த (உயர்தர) விசேட பரீட்சைக்கு இடையில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாகத் தோற்றமுடியாமல் போன தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் பெயர் விபரங்களைக் கல்லூரி அதிபர் கோருகிறார்.

# 11 உத்தியோகத்தர் இடமாற்றம்

(கொழும்புத்துறை)

கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர் பதினொரு பேர் அண்மையில் யாழ். மாவட்டத்தில் இருந்து பிற மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (24)

---

**வல்வெட்டித்துறை**

கடலில் நிலைகொண்டிருந்த கடற்படையினர் பீரங்கித்தாக்குதலையும் 50 கலிபர் தாக்குதலையும மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின் பின் 11·15 மணியளவில பலாலி இராணுவ முகாமிலிருந்து வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி ஆறு ஆட்லறி ஷெல்கள ஏவப்பட்டன.

இத்தாக்குதலின்போது வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மகேந்திரராசா (வயது 40) தியாகராசா அருட்செல்வம் (வயது 70) பாலசுப்பிரமணியம் ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை நேற்று நண்பகல் இரண்டுமணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து வல்வெட்டித்துறைப் பக்கமாக 4 ஆட்லறிஷெல்கள் ஏவப்பட்டன. இத்தாக்குதலில் சி. விஜயகுமார் (வயது 26) குணேஸ்வரி (வயது 23) வினோத் (6 மாதம்) ஆகியோர் படுகாயமடைந்துள்ளதுடன் இரு வீடுகளும் சேதமுற்றுள்ளன.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.